# கல்வியியல் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்வதற்கான மேன்முறையீடு கோரல்

2019 மற்றும் 2020ம் ஆண்டுகளில் க.பொ.த (உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு பயிலுனர்களை சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் தொடர்பான மேன்முறையீடுகளை 2023/02/28ம் திகதி வரையில் ஏற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக மேன்முறையீடுகள் இருப்பின் "கல்விப் பணிப்பாளர் (கல்வியியல் கல்லூரிகள்), கல்வியியல் கல்லூரிகள் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு அவை தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தங்களால் அனுப்பி வைக்கப்படும் மேன்முறையீட்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

1. விண்ணப்பிப்பதற்குரிய க.பொ.த (உ.த) வருடம்
2. பாடத் திட்டம் : புதிய/ பழைய என்பதாக
3. உயர் தர பரீட்சை சுட்டிலக்கம் மற்றும் பெறுபேறு (Z புள்ளியுடன்)
4. மேன்முறையீடு செய்வதற்கான காரணம்
5. விண்ணப்பதாரரின் பெயர். முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்
6. விண்ணப்பப் படிவத்தின் வன் பிரதி (அச்சுப் பிரதி) (PDF பிரதி)